மீன்வள உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஈரோடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் காலியாக உள்ள 5 மீன்வள உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. தமிழில் எழுத படிக்க மற்றும் பேச தெரிந்திருக்க வேண்டும், நீந்துதல், மீன்பிடித்தல், வலை பின்னுதல், பரிசல் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும், மீன்வளத் துறை பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றிருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் 35 வயதும், மற்ற பிரிவினர் 32 வயது நிரம்பாதவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், சுப்புராம் காம்ப்ளக்ஸ், 2ஆவது தளம், ஆட்சியர் அலுவலகம் அருகில், ஈரோடு 638011 என்ற முகவரியில் நேரில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

மின்னஞ்சல் முகவரியில் விண்ணப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் வரும் 26ஆம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.